கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு 234/2019

பிரதிவாதி தரப்பு சாட்சி –1 சந்திரன் என்பவரை திரு.ம.பெரியசாமி, இளநிலை உதவியாளர், அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 24.03.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

**1.** ராச மூப்பனுக்கு பாத்தியப்பட்ட சொத்தை 7,8 பிரதிவாதிகளுக்கு ஏற்படுத்திய கிரையம் எந்தவகையிலும் வாதிகளின் பங்கை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. எனவே, நான்7,8 பிரதிவாதிகளுக்கு ஏற்படுத்தி கொடுத்த கிரையம் எந்தவகையிலும் செல்லத்தக்கதல்ல என்றால்சரியல்ல. 7,8 பிரதிவாதிகளுக்கு ஏற்படுத்தி கொடுத்த கிரைய ஆவணத்தில் எனக்கு சொத்து எதன் அடிப்படையில் பாத்தியப்பட்டது என்பதை குறிப்பிட்டுள்ளேனா என்றால் வாய்க்காரராக எனக்கு ஒதுக்கப்பட்டதாக கூறியுள்ளேன். வாய்க்காரராக எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்து என்று மேற்படி கிரைய ஆவணத்தில் கண்டுள்ளதா என்றால் சரியாக நியாபகம் இல்லை.

2. தாவா சொத்தின் சர்வே எண்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்து பிரிவினை இல்லாத சொத்து என்றால் சரியல்ல. எனக்கு பிரிந்த சொத்தாகும். 7,8 பிரதிவாதிகளுக்கு நான் கிரையம் செய்து கொடுத்த சொத்தை 7,8 பிரதிவாதிகள் இதுநாள் வரை அனுபவம் செய்ததில்லை என்றால் சரிதான். மேற்படி கிரைய சொத்தை தான் பாதையாக பயன்படுத்தி வருகிறோம் என்றால் நாங்கள் தான் பயன்படுத்தி வருகிறோம். வாதிகள் அவர்கள் வீட்டிற்கு செல்ல வேண்டுமானால் தாவா சொத்தில் உள்ள பாதை வழியாக தான் செல்ல வேண்டும் என்றால் சரியல்ல.

3. ராச மூப்பனுக்கு கிரையம் மூலம் பாத்தியப்பட்ட சொத்தை இதுநாள் வரை எவ்வித பிரிவினையும் செய்து கொள்ளாமல் நாங்கள் ஒன்றாக தான் அனுபவம் செய்து வருகிறோம் என்றும், எனது பெயரில் உள்ள தவறுதலாக ஏற்பட்ட பட்டாவை வைத்து தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. தவறுதலான பட்டாவை வைத்து 7,8 பிரதிவாதிகளுக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளேன் என்றும், அதனை பொறுத்து தான் வாதிகள் தரப்பில் இவ்வழக்கிற்கு முன்பு வழக்கறிஞர் அறிவிப்பு எனக்கு அனுப்பட்டது என்றும், வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டு நான் பதில் அறிவிப்பு கொடுக்காமல் இருந்தால் தான் வாதிகள் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

4. 7,8 பிரதிவாதிகளுக்கு கிரையம் பதிவு செய்ததை தவிர 7,8 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தில் எந்த அனுபவமும் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்தை நான் தான் அனுபவம் செய்து வருகிறேன். தாவா சொத்தை பொறுத்து 7,8 பிரதிவாதிகளுக்கு நான் செய்து கொடுத்த கிரையம் பத்திரம் செல்லத்தக்கதல்ல என்றும், தாவா சொத்தில்

வாதிகளுக்கும் உரிமை உள்ளதால், தாவா சொத்தை பொறுத்து வாதிகள் கோரியுள்ள பாகப்பிரிவினை பரிகாரமானது வாதிகளுக்கு கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல. வாதிகளின் உறவுமுறையை தவறாக கொச்சைபடுத்தி கட்சி செய்து வருவதால் தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.Yughathymariya
**Additional District Munsif,**
**Kulithalai.**